# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.279/2025

Deposition of Witness for L.W.9 / P.W.7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரண்யா | | | |
| Husband's Name | : | பார்த்திபன் | Occupation | : | காவல் ஆய்வாளர் |
| Village | : | | | | |
| District | : | ஊட்டி | Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.02.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஊட்டி ஆயுதப்படை பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, கடந்த 25.06.2024 ஆம் தேதி அன்று, 18:30 மணியளவில், நான் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ரேணுகாதேவி என்பவரை ஈரோடு மேட்டூர் ரோடு, முனிசிபல் காலனி பிரிவில், போக்குவரத்து ஒழுங்குப்படுத்தும் அலுவலில் நியமித்திருந்தேன். ரேணுகாதேவி மேற்படி பணியில் இருந்த பொழுது மூன்று நபர்கள் டியோ இருசக்கர வாகனத்தில் வந்து பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரேணுகாதேவி என்பவரிடம் தகராறில் ஈடுபட்டதாக அவர் நிலைய உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம் என்பவரிடம் தொலைபேசி வாயிலாக புகார் அளித்தார். மேற்படி உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம் என்பவர் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றார். அப்போது மேற்படி மூன்று நபர்களும் காவல்துறையினரிடம் தகாத வார்த்தைகளால் பேசி, அவர்களது உடையை கழற்றி அருவருக்கத்தக்க வகையில் நடந்து கொள்வதாகவும், என்னை உடனடியாக சம்பவ இடத்திற்கு வருமாறும், உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம் என்னிடம் தொலைபேசி வாயிலாக தெரிவித்தார். சம்பவ

இடமானது ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலைய எல்லைக்குள் வருவதால் மேற்படி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து, சம்பவத்தில் ஈடுபட்ட மூன்று நபர்கள் மீதும் புகார் அளித்தோம். வ மேற்படி சம்பவத்தின் போது, தனது உடையை கழற்றி தகாத வார்த்தைகளால் பேசி, ஆபாசமாக நடந்து கொண்ட நபர் நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு இருந்தார். சம்பவம் நடைபெற்று இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், என்னால் தற்போது அந்த நபரை சரியாக அடையாளம் காட்ட இயலாது. வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது மணி எவ்வளவு இருக்கும் என்றால், மாலை 6:30 மணி முதல் 07.00 மணி இருக்கும். எனக்கு தகவல் கிடைத்த போது மணி எவ்வளவு இருக்கும் என்றால், என்னால் சரியாக சொல்ல முடியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் வரும்போது ஈரோடு நகர மற்றும் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் இருந்து காவலர்கள் வந்து விட்டார்கள் என்றால், சரிதான். நான் மாலை சென்றபோதே என்னிடம் புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்து, வாக்கு மூலம் பதிவு செய்தார் என்றால், சரிதான். அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் சம்பவ இடம் சென்றபோது புகார் எத்தனை மணிக்கு அளிக்கப்பட்டது என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால், நான் சென்ற பின்னிட்டு தான் அரசு மருத்துவமனை காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி புகார் அளிக்கப்பட்டது. நான் சென்றதாக சொன்ன சமயத்தில் அன்றைய தினம் இரவு சுமார் 7:00 மணிக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபரை அரசு மருத்துவமனை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டனர் என்றால், சரிதான். சம்பவம் குறித்த புகாரானது அன்றைய தினம் 07.00 மணி முதல் 08.00 மணிக்குள் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். சம்பவம் நடந்த நேரம் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல, மாலை 06.00 மணி முதல் 07.00 மணிக்குள் நடந்தது. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது பொதுமக்கள் கூட்டம் இருந்தது என்றால், சரிதான். அரசு மருத்துவமனை காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து அங்கு இருந்த பொதுமக்கள் மற்றும் அங்கு சுற்றி இருந்த கடைகளில் உள்ள நபர்களை விசாரணை செய்தார்கள் என்றால், சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றவுடன் சம்பவம் குறித்து சிறப்பு உதவி ஆய்வாளர் ரேணுகா தேவியிடம் உடனடியாக புகார் அளிக்க அறிவுரை செய்தேன் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் இந்த வழக்கின்

எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாக சொல்வதும், போலீசார் விசாரணைக்காக அவரை அழைத்துச் சென்றதாக சொல்வது இவ்வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால், சரியல்ல. நான் அரசு மருத்துவமனை காவல் நிலையத்தினர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும், என்னுடைய உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.279/2025
Deposition of Witness for L.W.10 / P.W.8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சாந்தி | | | |
| Husband's Name | : | கேசவன் | Occupation | : | தலைமைக்காவலர், அனைத்து மகளிர் காவல் நிலையம், ஈரோடு |
| Village | : | | | | |
| District | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.02.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, கடந்த 26.06.2024-ம் தேதி அன்று, காலை 10.00 மணிக்கு, நான் ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ரேணுகாதேவி என்பவர் கொடுத்த எழுத்து மூலமாக பெற்று, நிறைய குற்ற எண்.37/2024, சட்டப்பிரிவுகள் 294(b), 353, 290 IPC-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் மாண்பமை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை உயரதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி.பிரேமா அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

புகாரில் வலது பக்கம் மேல் மூளையிலும், இடது பக்க கேள்வி முனையிலும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும், சுமார் அரை பரலாங்கு தூரம் என்றால், சரிதான். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு நடந்து வந்தால் அதிகபட்சமாக 00:10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால், சரிதான். இந்த வழக்கில் சம்பவம் நடந்து 15.00 மணி நேரம் களித்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். சம்பவம் நடந்த உடனேயே நானும், அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் பணிபுரியும் மற்ற காவலர்களும் சம்பவ இடத்திற்கு சென்று விட்டோம் என்றால், சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் இருந்த போக்குவரத்து நெரிசலை சரி செய்துவிட்டு, அங்கு இருந்த நபரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டோம் என்றால், சரிதான். அந்த நபரை மறுநாள் மாலை வரை எங்கள் காவல் நிலையத்தில் தான் வைத்திருந்தோம் என்றால், சரியல்ல, என்னுடைய உயர் அதிகாரி என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையின் எட்டாவது காலத்தில் தாமதத்திற்கான காரணம் என்னவென்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் Column No.3(c)–ல் பொது நாட்குறிப்பு பதிவு குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல, அந்த Option இல்லை. முதல் தகவல் அறிக்கையில் ஏதேனும் பிழைகள் இருந்தால் அந்த பிழைகளை திருத்தம் செய்து சுருக்கொப்பம் செய்யப்படுகின்றதா என்றால், இல்லை. நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில், புகார் எதுவும் பெறவில்லை, அந்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. புகார் மனுவில் இரண்டாவது பக்கத்தில் குற்ற எண் மற்றும் பிரிவுகள் அனைத்தும் அடித்தல் திருத்தத்துடன் உள்ளது என்றால், சரிதான். மேற்படி அடித்தல் திருத்தலுக்கான சுருக்கொப்பம் செய்யப்பட்டதா என்றால், இல்லை. குற்ற எண். 36 என்று முதலில் குறிப்பிட்டு விட்டு பின்னர் திருத்தம் செய்து 37 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை எங்களுடைய உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பின்னிட்டு எங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால், சரியல்ல. 11 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை: இல்லை.</u>**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.